ஆட்சேர்ப்புக்கான தனிப்பட்ட தரவு பாதுகாப்பு அறிவித்தல்

நடைமுறைக்கு வரும் திகதி :20.03.2024

இலங்கை வங்கி ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வு செயன்முறையின்போது உங்களது தனிப்பட்ட தரவுகளை எவ்வாறு கையாளுகிறது என்பதை இவ்வறித்தல் விவரிக்கிறது.

1. இலங்கை வங்கி எவ்வாறான தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்கிறது

இலங்கை வங்கி (என்று குறிப்பிடப்படுகிறது "வங்கி" இதற்குப் பின்னர்) ஆட்சேர்ப்பின்போது உங்களைப் பற்றிய பல்வேறு தனிப்பட்ட தகவல்களைச் பின்வருமாறு சேகரித்து, உபயோகப்படுத்தி, செயல்முறைக்குள்ளாக்குகின்றது .

- குடும்பப் பெயர், முதற் பெயர், மத்தியப் பெயர், பிறந்த திகதி, தொடர்பு விவரங்கள், தொடர்பு முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை.
- விண்ணப்பப் படிவத்திலுள்ள தகவல்கள் (குறிப்பிட்ட வெற்றிடத்திற்கான விளம்பரத்திற்கேற்ப மாறுபடலாம். ஆயினும், பொதுவாக தொழில்முறை அனுபவங்கள், கல்வித் தகைமைகள், மொழித் திறன்கள், குறிப்புகள், தொழில்முறை உறுப்புரிமைகள் என்பவற்றை உள்ளடங்குகின்றது).
- அடையாள ஆவணங்கள் (தே.அ. அட்டை/ கடவுச் சீட்டு) மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம்
- முந்தைய தொழில் வழங்குநரின் உறுதிப்படுத்தல், தொழில் அனுபவங்கள் மற்றும் பண்புகள் தொடர்பான குறிப்புகள்
- நிதி விவரங்கள், மருத்துவ பரிசோதனையின் முடிவு / உடல் ஆரோக்கியம் குறித்த தரவுகள் (கட்டாய மருத்துவ பரிசோதனை மூலம் வெளியிடப்படலாம்) மற்றும் எந்தவொரு குற்றத்திலும் ஈடுபடவில்லை என்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழங்கிய உறுதிப்படுத்தல்.

2. தனிப்பட்ட தரவுகளை செயன்முறைக்குள்ளாக்குவதற்கான நோக்கமும் சட்ட அடிப்படையும்

- வெற்றிடம் குறித்த விளம்பரம் அல்லது வெற்றிடம் தொடர்பான வேறு ஏதேனும் ஆவணங்களில் விவரிக்கப்பட்டுள்ளபடி இலங்கை வங்கியிலுள்ள பதவிக்கான விண்ணப்பதாரர்களின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்காக, தேர்வு மற்றும் ஆட்சேர்ப்பு செயன்முறை முழுவதும் வங்கி தனிப்பட்ட தரவுகளை செயன்முறைக்குள்ளாக்குவது அவசியமாகும்.

- தனிப்பட்ட தரவானது உங்களது சட்டப்பூர்வ உரிமைகளுடன் இணங்குகின்றது என்பதனை உறுதி செய்வதற்கும், வினைத் திறனான மனிதவள முகாமைத்துவம் மற்றும் வணிக நிர்வாகத்தை உறுதி செய்வதற்கும் இச்செயலாக்கம் அவசியமாகும். மேலும், வங்கி சாத்தியமான சட்டபூர்வ உரிமைகோரல்களை நிறுவ, செயற்படுத்த அல்லது பாதுகாப்பதற்கு சட்டரீதியான மற்றும்/அல்லது ஒழுங்குமுறை தேவைகளுடனும் பொறுப்புகளுடன் இணங்குவதற்கும் தனிப்பட்ட தரவு செயலாக்கம் அவசியமாகும்.

3. வங்கி உங்களது தனிப்பட்ட தகவல்களை எவ்வாறு சேகரித்து சேமிக்கிறது

- ஆட்சேர்ப்புச் செயற்பாட்டின்போது உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை வங்கி நேரடியாகவோ அல்லது சில சமயங்களில் வேலைவாய்ப்பு/ஆட்சேர்ப்பு முகவர்கள், முந்தைய தொழில் வழங்குநர் மற்றும் பண்புகளை உறுதிப்படுத்தியவர் போன்ற மூன்றாம் தரப்பினரிடமிருந்தோ சேகரிக்கிறது.
- தேர்வாளர் சபை/ஆய்வுக் குழு உறுப்பினர்கள்/குழு உறுப்பினர்கள் மற்றும் மருத்துவ சேவை மற்றும் இலங்கை பொலிஸ் போன்ற வெளிப்புற நிறுவனங்கள்/அதிகாரிகள் (பொருத்தமான வகையில்) ஆகியோரிடமிருந்தும் தனிப்பட்ட தரவுகள் சேகரிக்கப்படலாம்.
- உங்களது விண்ணப்பப் பதிவு, வங்கியின் மனிதவள முகாமைத்துவ முறைமை, வங்கியின் தகவல் தொழில்நுட்ப முறைமை மற்றும் மின்னஞ்சல் முறைமை உள்ளடங்கலாக உங்களது தனிப்பட்ட தகவல்கள் வெவ்வேறு இடங்களில் சேமிக்கப்படலாம்.

4. உங்களது தனிப்பட்ட தகவல்களை செயன்முறைக்குள்ளாக்குபவர்கள் யார்?

- ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வு நோக்கங்களுக்காக வங்கியின் மனிதவளத் துறை உறுப்பினர்கள், நேர்முகப் பரீட்சைக்கு நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள், வெற்றிடமுள்ள பிரிவின் தலைவர்கள் மற்றும் செயன்முறைக்குள்ளாக்கும் தகவல் தொழில்நுட்ப பிரிவின் ஊழியர்கள் உள்ளிட்டவர்களுடன் வங்கியினுள் உங்களது தனிப்பட்ட தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படலாம்.

  வங்கி பின்வரும் வகையில் உங்களது தனிப்பட்ட தகவல்களை மூன்றாம் தரப்பினருடனும் அவர்களினால் நியமிக்கப்பட்ட முகவர்களுடனும் பகிர்ந்து கொள்ளும்.

- கல்வி அமைச்சின் பரீட்சைகள் திணைக்களம் அல்லது தேர்வு பரீட்சைகளை நடத்துவதற்கான வேறு ஏதேனும் வெளிப்புற நிறுவனங்கள்

- தொழில் வாய்ப்புக்கு முன்பு உடல் ஆரோக்கியத்தையும் குற்றப் பதிவுகளையும் பரிசோதிப்பதற்கான வெளியக நிறுவனங்கள்
- கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்முறை தகைமைகளுக்கான நிறுவப்பட்ட அமைப்புகள்
- குறிப்புகளைப் பெறுவதற்கும் அல்லது சரிபார்ப்பதற்குமான முந்தைய தொழில் வழங்குநர்கள்
- தொழில் வாய்ப்புடன் தொடர்பான பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு சட்டத்தரணிகள் மற்றும் வரி ஆலோசகர்கள் போன்ற தொழில்முறை ஆலோசகர்கள்
- சட்டத்தின் பிரகாரம் அத்தகைய தகவல்களை வெளியிட வேண்டியிருக்கும் போது அல்லது ஏற்கனவேயுள்ள சட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்ற நிலைமையின்போது

5. வங்கி உங்களது தனிப்பட்ட தகவல்களை எவ்வளவு காலம் வைத்திருக்கும்?

- தனிப்பட்ட தகவல் சேகரிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் நோக்கம் நிறைவேற்றப்படும் வரை மட்டுமே உங்களது தனிப்பட்ட தகவல்களை வங்கி வைத்திருக்கும்.
- வங்கியிலுள்ள வெற்றிடத்திற்கு நீங்கள் தெரிவு செய்யப்படாவிட்டால், குறித்த ஆட்சேர்ப்பு செயன்முறை நிறைவடைந்ததும் பொதுவாக வங்கி உங்களது தனிப்பட்ட தகவலை வைத்திருப்பதற்கு விசேட அல்லது சட்டப்பூர்வ காரணம் எதுவுமில்லையெனில் அவற்றை பன்னிரண்டு ஆண்டுகள் வரை வைத்திருக்கும்.

- வங்கியிலுள்ள வெற்றிடத்திற்கு நீங்கள் தேர்வு செய்யப்பட்டால், ஆட்சேர்ப்பு செயன்முறையின்போது சேகரித்த தனிப்பட்ட தகவல்களை வங்கி நடைமுறையிலுள்ள சட்டங்களின்படி தொழில்வாய்ப்பிற்கு பின்னரும் வைத்திருக்கும்.

6. இரகசியத்தன்மை

- 4 ஆம் இலக்கத்திலுள்ள விடயங்களுக்கேற்ப, உங்களது தனிப்பட்ட தகவல்களின் இரகசியத்தன்மையை வங்கி மிகக் கவனமாக பாதுகாக்கின்றது. விண்ணப்பதாரர் பகிரும் எந்தவொரு தனிப்பட்ட தகவலும் மிகுந்த கவனத்துடன் கையாளப்படும் என்பதுடன் அவை ஆட்சேர்ப்பிற்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

7. தரவுப் பாதுகாப்பு

- நடைமுறையிலுள்ள தரவு பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை நாம் பின்பற்றுகிறோம். ஆட்சேர்ப்பு செயன்முறையின்போது சேகரிக்கப்படும் தனிப்பட்ட தரவு எமது தனியுரிமைக் கொள்கை மற்றும் பொருந்தமான சட்டங்களின்படி கையாளப்படும்.

8. தொடர்புத் தகவல்

மேலதிக விவரங்கள் அல்லது உதவிகளைப் பெற dpo@boc.lk என்ற மின்னஞ்சல் முகவரியூடாக எம்மைத் தொடர்பு கொள்ளலாம். கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியூடாக உங்களது எழுத்து மூலமான கோரிக்கைகளை எமக்கு அனுப்பி வைக்கலாம்.

தரவுப் பாதுகாப்பு அதிகாரி,
11ஆம் மாடி
இலங்கை வங்கி
இலக்கம் 1, இலங்கை வங்கிச் சதுக்கம்,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01

நீங்கள் கருத்திற்கொள்ளும் விடயங்களை உடனடியாகவும் திறம்படவும் தீர்ப்பதற்கு நாம் உறுதிபூண்டுள்ளோம். அத்துடன், இச்செயல்முறை முழுவதும் உங்களுக்கு ஆதரவளிப்பதற்கு நாம் தயாராக உள்ளோம்.